Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.STC. 325/2022 DW-2**

Name : திரு.வினேஷ்ராஜா
Father / Husband name : துரைராஜ்
Village : கள்ளக்குறிச்சி
Age : 39
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 16.12.2025

Complainant present. Accused present. Both side counsel present.

**<u>எதிரி தரப்பில் முதல் விசாரணை ( நேரம் 11.55 - 12.01 )</u>**

நான் தற்போது ACB கள்ளக்குறிச்சி எஸ்பிஐ வங்கியில் மேலாளராக பணிபுரிகிறேன். வங்கி கணக்கு எண் - 11272375659 என்ற சேமிப்பு கணக்கு செல்வராணி என்பவரின் பெயரில் உள்ளது. காசோலை எண் - 175595, 175596 ஆகிய காசோலைகளை செல்வராணிக்கு வழங்கப்பட்டது. காசோலை எண் - 175595 எந்த தேதியில், எவ்வளவு தொகை யாருக்கு வழங்கப்பட்டது என்றால் மேற்படி காசோலை 16.05.2018 அன்று ரூ.1,00,000/- கோவிந்தசாமி என்பவருக்கு வழங்கப்பட்டது. காசோலை எண் -175596 எந்த தேதியில், எவ்வளவு தொகை யாருக்கு வழங்கப்பட்டது என்றால் மேற்படி காசோலை 16.05.2018 அன்று ரூ.1,50,000/- கோவிந்தசாமி என்பவருக்கு வழங்கப்பட்டது. கோவிந்தசாமி நேரடியாக எங்கள் வங்கியில் மேற்படி காசோலைகளை வசூலுக்கு செலுத்தினாரா அல்லது அவரின் கணக்கு மூலமாக செலுத்தினாரா என்றால் அவரது கணக்கு மூலமாக வசூலுக்கு செலுத்தினார். கோவிந்தசாமியின் கணக்கு விவரங்கள் என்ன என்றால் ACB சின்னசேலம் எஸ்பிஐ வங்கியில் கணக்கு எண் - 31883819671 ஆகும். கோவிந்தசாமிக்கு எங்கள் வங்கியில் கணக்கு உள்ளதா என்றால் தெரியாது, ஆவணங்களை பார்த்தால் தெரியும். தற்போது செல்வராணி வங்கி கணக்கு எண் - 11272375659 ன் 01.01.2018 - 31.12.2018 வரையிலான வங்கி

**கணக்கு விவரப்பட்டியல் சான்றிட்ட நகல் எ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்டுகிறது.**

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

போதிய காலஅவகாசம் கொடுத்தும் வங்கி மேலாளர் மதியம் 1 மணிவரை காத்திருந்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை, எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**